# இயல் 6.9 - பின்னங்கள்

பயிற்சி எண் :: 6.9.1.4.G

பின்னங்கள் - வேற்றின பின்னங்கள் - பயிற்சி

## பின்னங்கள் - வேற்றின பின்னங்கள் - பயிற்சி

கலைச்செல்வன் தமிழ்ச்செல்வன் அருட்செல்வன் ஆகிய மூவரும் சகோதரர்கள். அவர்களிடம் 1 லிட்டர் கொள்ளளவுடைய ஓரோர் நீர்க்குடுவை இருந்தது. அவர்கள் பள்ளிக்குச் செல்கையில், அவற்றில் முறையே 3/4, 4/5 மற்றும் 7/8 நீரின் அளவு இருந்தது. மதிய உணவு இடைவேளையின் பொழுது அவர்கள் முறையே 200 மி.லி, 1/4 லிட்டர் மற்றும் 300 மி.லி நீர் அருந்தினர். எனில், அவர்களில் யாருடைய குடுவையில் அதிக நீர் மீதியிருக்கும்?

### விடைகாணும் படிகள்

1. அவர்களிடம் இருந்தது 1 லிட்டர் குடுவையாதலால் முதலில் அவற்றுள் இருந்த நீரின் அளவை நாம் லிட்டரில் உள்ளதாகக் கொள்ளலாம். எனவே, முதலில் இருந்த நீரின் அளவு 3/4 லிட்டர், 4/5 லிட்டர் மற்றும் 7/8 லிட்டர் என ஆகிறது.
2. மதிய உணவு இடைவேளையின் பொழுது அவர்கள் குடித்த நீரின் அளவுகள் கணக்கில் இருவருக்கு மில்லி லிட்டரில் தரப்பட்டுள்ளன. அவற்றை நாம் 1000 ஆல் வகுத்து, லிட்டரில் மாற்றிக்கொள்ள வேண்டும்.
3. கழிப்பதற்கு ஏதுவாக, மதியம் குடித்த நீரின் அளவுகளை பின்ன அமைப்பில் எழுதுக்கொள்ள வேண்டும்.
4. முதலில் இருந்த நீரின் அளவில் அவர்கள் மதியம் குடித்த நீரின் அளவைக்கழித்தால் நமக்கு மீதமுள்ள நீரின் அளவு லிட்டரில் கிடைத்து விடும்.
5. மீதியுள்ள நீரின் அளவுகளை ஓரின பின்னங்களாக மாற்றி அமைத்தால் நம்மால் எந்தக்குடுவையில் அதிகம் தண்ணிர் மீதியுள்ளது என எளிதாகக் கண்டுபிடித்துவிட இயலும்.

| விவரம் | கலைச்செல்வன் | தமிழ்ச்செல்வன் | அருட்செல்வன் |
|---|---|---|---|
| காலையில் கொண்டுவந்த நீரின் அளவு (லிட்டரில்) | $\frac{3}{4}$ | $\frac{4}{5}$ | $\frac{7}{8}$ |
| மதியம் குடித்த நீரின் அளவு | 200 மி.லி | $\frac{1}{4}$லி | 300 மி.லி |
| மதியம் குடித்த நீரின் அளவு (லிட்டரில்) | $\frac{200}{1000} = \frac{20\cancel{0}}{100\cancel{0}}$ | $\frac{1}{4}$லி | $\frac{300}{1000} = \frac{30\cancel{0}}{100\cancel{0}}$ |
| எளிமைப்படுத்தும்பொழுது கிடைப்பது... | $\frac{\cancel{2}^{1}}{\cancel{10}^{5}} = \frac{1}{5}$ | $\frac{1}{4}$ | $\frac{3}{10}$ |
| குடித்தது போக மீதியுள்ள நீரின் அளவு (லிட்டரில்) (முதலில் இருந்த நீரிலிருந்து குடித்த நீரைக்கழிக்க) | $\frac{3}{4} - \frac{1}{5}$ | $\frac{4}{5} - \frac{1}{4}$ | $\frac{7}{8} - \frac{3}{10}$ |
| மீ.சி.ம. கண்டுபிடித்தது கழிக்கக் கிடைப்பது | $\frac{15-4}{20} = \frac{11}{20}$ | $\frac{16-5}{20} = \frac{11}{20}$ | $\frac{35-12}{40} = \frac{23}{40}$ |
| மூன்று வேற்றின பின்னங்களையும் ஓரின பின்னங்களாக மற்றுகையில் நமக்குக்கிடைப்பது | $\frac{11\times2}{20\times2} = \frac{22}{40}$ | $\frac{11\times2}{20\times2} = \frac{22}{40}$ | $\frac{23}{40}$ |
| குடுவையில் மீதியுள்ள நீரின் அளவுகள் | $\frac{22}{40}$ | $\frac{22}{40}$ | $\frac{23}{40}$ |

40-ல் 23 பங்குடைய **அருட்செல்வனின்** குடுவையிலேயே மதியம் தண்ணிர் குடித்தது போக, அதிகம் தண்ணீர் மீதியிருக்கும்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 15th February, 2022 :: 18:26 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**